போஸ்டு ரி. நெ 819.

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—திருக்குறள்.

தொகுதி ௧. } விரோதிகிருது வருஷம் ஆடி மீ { பகுதி ௪.

பொருளடக்கம்.


காரக—பத்திராதிபா ௧௦௫

சிலம்பியும் சாமும்—ம. கோபாலகிருஷ்ணையர். ௧௦௬

இலங்கை வேடர்கள்—தி. சிவசிதம்பரம்பிள்ளை ௧௧௨

மாலினி மாதவம்—R. S. நாராயணஸ்வாமி ஐயர் B. A. B. L., ௧௧௫

அரிச்சுவடியைப்பற்றிய ஓர் ஐயவினா—ஓர் சந்தேகி ௧௨௩

மோகனசந்தேசம்—R. சேஷகிரிநாராயணசர்மா B. A., B. L., ௧௨௪

நாட்டுக்கோட்டையாரும் மூன்றுவருஷக்கணக்கும் } மு. சின்னையாசெட்டி ௧௨௭

தென்னை பனை மரத்து வண்டுகள்—வி. எ. பார்பர் ௧௩௦

சமாசாரக்கொத்து—பத்திராதிபர் ௧௩௨



மு. ரா. கந்தசாமிக்கவிராயர்—புரொப்ரைட்டர்.

ம. கோபாலகிருஷ்ணையர். } பத்திராதிபர்.
மு. ரா. கந்தசாமிக் கவிராயர். }

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ...டுதான்.

மாணாக்கர்கட்கு வருஷசந்தா ரூ 1. தபாற்கூலி ... பிரதி அணா 3.

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது.

வித்தியாபாநு விளம்பரம்.

# இதை நினையுங்கள்.

உங்களுக்கு நவீனமும் நாகரீகமுமான நூதன பாரிஸ் கலர்களில்

அதாவது,

## ரோஜா, கத்திரிப் பச்சை, நீலம், மேகவர்ணம், பவளம், வெளிர்ப்பச்சை, தாமிரம், ஆரஞ்சு.

இந்தக் கலர்களில்

## ரவிக்கை குட்டைகளும், புடவைகளும்

தேவையாயிருந்தால் நீங்கள்

காசியிலுள்ள பட்டு வர்த்தகம்

## கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி

க்குத்தான் எழுதவேண்டும்.

வ றி கா ளி ல,

நம்மவர்களுக்கு பலநதான பலவிதமான தினுசுகள் அவர்களிடத்தில்தான் ஜாஸ்தியாக இருக்கின்றன.

அநேக ஸ்திரீகள் தங்களுக்குத் தகுந்த ரவிக்கை தினுசுகளும் புடவை தினுசுகளும் கிடைப்பதைபபற்றிக் குறிபபாக இருக்கிறார்கள்.

இநதக் கமபெனியார் சப்ளைசெய்யும தினுசுகள வெளியூர் ஜனஙகளுககு நல்ல திருப்தியைக் கொடுககமுடியும்.

இவர்களுக்கு வரும் வெளியூர் ஆர்டர்களை மிக கவனத்துடன் கவனித்து அனுப்புவதால் வெளியூரார்களுக்குத் தகுந்த தினுசுகளே அனுப்பபபடு மென்பது திண்ணம.

| | |
|---|---|
| 42 இஞ்சு அகலம் <br> 8 கஜம் நீளம் | புடவை 1க்கு விலை <br> ரூ 25 முதல ரூ 50 வரை. |
| 42 இஞ்சு அகலம <br> 20 இஞ்சு நீளம் | ரவிக்கை 1-க்கு விலை <br> ரூ 2—8—0 முதல் ரூ 5 வரை |

எங்கள் ஜெனரல் கேட்லாக் இனமாக அனுப்புவோம் எமது சரியான விலாசத்தை மறந்துவிடாதிருக்க பிரார்த்திக்கின்றோம். (விலாசம்)

## கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி.

பட்டுப்பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீகாசி. Benares City.

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்
ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௩. } விரோதிகிருது ஆடிமீ {பகுதி ௪.

## கார்க்.

கார்க்கை நாம் அடிக்கடி பார்த்தும் உபயோகித்தும் வருகின்றோமாயினும், அது நம் நாட்டில் இல்லாக் குறையால் அஃது இன்னதென்பதும், எப்படிக் கிடைக்கிறதென்பதும், நம்மவரில் அநேகர் அறிந்திருக்கமாட்டார்கள். "கார்க்" என்னும் பதத்தின் அர்த்தம் யார்க்கேனும் தெரியுமானால் அவர்களுக்கு அஃது இன்னதென்பது, நன்கு தெரியும். "கார்க்" என்பதற்கு "மரப்பட்டை" என்பதுபொருள் ஆகவே, இது இயற்கையில் பொதுப்பெயராயினும், சிறப்புப் பெயரேயாகி என்றென்றைக்கும் பச்சையாயிருக்கும் ஓர்வகைச் சிந்தூரப் பெருமரப் (Oak) பட்டையையே உணர்த்துவதாகும்.

உற்பத்தி:—இம்மரம் சீதளப் பிரதேசங்களில் பயிராகும். இதனை ஐரோப்பாவில் பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல் முதலிய தேசங்களிலும், வட ஆப்பிரிக்காவில் கடலோரமாயுள்ள நாடுகளிலும், பல இடங்களில் ஏராளமாகக் காணலாம். இவற்றுள், பிரான்ஸில் பயிராகும் மரமே சிறந்த கார்க்கைத் தருவதாகும்.

இம்மரம் 35 அல்லது 40 அடி உயரம்வரை சாதாரணமாய் வளரும். அடிமரத்தின் சுற்றளவு ஏறக்குறைய 8 அடி. பயிரிடப்பட்ட இருபது அல்லது இருபத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு தான் அதன் பட்டை முதல் முதல் எடுபடும். ஆயினும் அப்போது எடுபடும் பட்டை "மோட்டா" வாகவும், பொருக்குப் போன்று கரடுமுரடாகவும், துவாரங்கள் நிரம்பியும் இருக்கும். ஆதலால்,

அது விசேஷமாகப் பயன்படமாட்டாது. வலைஞர்கள், மீன் பிடிக்கும் தங்கள் வலைக்கு மிதப்பாகுக இவைகளை உபயோகிப்பார்கள்.

முதல் முறைப் பட்டை எடுத்தானதும் பத்து வருடங்களுக்கு அதினின்றும் பட்டை எடுபட மாட்டாது. பிறகு மரத்தின தகுதிக்கு ஏற்ப 10 வருஷங்களுக்கு ஓர் முறையேனும் 8 வருஷங்களுக்கு ஓர்முறையேனுமே பட்டையை எடுப்பார்கள். பட்டை அடிக்கடி எடுபட்டால் எந்த மரத்துக்கும் அழிவு நேரிடுவது இயல்பாயிருக்க,கார்க் மரத்துக்கு மட்டும் எவ்வளவுக் கெவ்வளவு பட்டை எடுபடுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நன்மையே யாகும். பட்டை எடுபடாக் கார்க் மரம் 50 அல்லது 60 வருஷங்களுக்குள் இறந்து பட்டொழிவதும், கிரமமாகப் பட்டை எடுபடும் மரம் 180 வருஷங்களுக்குக் குறையாமல் ஜீவித்திருப்பதுமே இதற்குப் போதிய சான்றும்.

பட்டை எடுபடும் பருவம்:—கோடைகாலமே பட்டை எடுக்க ஏற்றகாலமாம். ஜூலை ஆகஸ்டு மாதங்களில் அது சமபந்தமாய் வேலைசெய்வோர் பலரை அங்கு உண்டாகு மிடங்களிற் காணலாம்.

பட்டை பெறுமாறு:—பட்டையானது போதிய அளவு பருத்து முதிர்ந்தவுடன் (அதாவது மரம்வைத்துக் குறைந்தது இருபது வருஷங்களாவது ஆனபிறகு), அதனை எடுக்க வேலைசெய்வோர், பூமிக்கு இரண்டொரு சாணுக்கு மேலும், கிளைகள் தொடங்கிய விடத்திற்கு இரண்டொரு சாணுக்குக் கீழும் மரத்தைச் சுற்றிலும் வட்டமாய் ஆழக்கீறி அடையாளம் செய்து கொள்ளுவார்கள். இவ்வாறு கீறுகையில் மரத்தின் அகணி (உட்பட்டை), யாதொரு கேடும் உறாதபடி கீறவேண்டும். ஏனெனில் அகணி கீறுண்டால் அது கொஞ்ச காலத்துக்குள் வாடி உலர்ந்துபோவதோடு கூட மரத்திற்கே அழிவை உண்டாக்கும். நிற்க. இக்கீறல்கள் பட்டை இன்ன இடத்திலிருந்து இன்னஇடம் வரைதான் எடுக்கலாமென்று காட்டக்கூடிய அடையாளங்களாம். பிறகு மரத்தைச் சுற்றி நெடுக்காகவும், குறுக்காகவும், மூன்று அல்லது நான்கு இடங்களில், முன்போல் (அதி நுட்பமான அதன் அகணிக்கு யாதொரு பழுது முறாதபடி)கீறி மெதுவாய் உளி முதலியவற்றின் உதவியால் தகடு தகடாக அவற்றைப் பெயர்த்தெடுப்பார்கள்.

பட்டையைப் பண்படுத்துமாறு:—இவ்வாறு எடுபட்ட பட்டையானது தான் எடுபட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் சுருண்டு கொள்ள ஆரம்பிக்கும். அது அவ்வாறு சுருளாதபடி அதைத் தண்ணீரில் ஊறவைத்து அச்சுப்போன்ற பள்ளங்களில் திணித்துத் தட்டையாகுமாறு அழுத்தப்படும். பிறகு அதை வெயிலில் காயவைத்து அதிலுள்ள அற்பசொற்ப துவாரங்களும் நெருங்கி ஒடுங்கி அடைபடும் பொருட்டும், அத்துவாரங்களுள் அடைந்திருக்கும் பூச்சிகள் சாகும்பொருட்டும் பட்டையை நெருப்பில் சூடுறவாட்டுவார்கள். அப்போது பட்டைகள் மீண்டும் சுருள ஆரம்பிக்கும். அவற்றை நிமிர்த்தி மீண்டும் தகடாக்குமாறு பளுவுள்ள பாரங்களை அவற்றின்மேல் பலநாள்வைத்திருப்பார்கள். பிறகு பட்டைகள் மீண்டும் பருமனாகுமாறு அவற்றை 5 அல்லது 6 மணி நேரம் தண்ணீரில் ஊறவைப்பார்கள். இதற்கப்புறம் தகடுகள் போன்ற அப்பட்டைகளை ஒன்றன்மேல் ஒன்றாய் அடுக்கிப் பெரு மூட்டைகளாகக் கட்டி அந்நிய நாடுகளுக்கு வியாபாரத்துக்காக அனுப்புவார்கள்.

தக்கை யாதிய செய்யும்விதம்:-இவ்வாறு அனுப்பும் பட்டைகள் யந்திர உதவியின்றிப் பெரும்பாலும் மனிதர்கள் கையாலேயே அறுப்புண்டு நானாவித அடைப்பான்களாகவும், பிற பொருள்களாகவும் ஆகின்றன. ஐரோப்பாவின் தென்பாகத்திலிருந்து வருஷாவருஷம் 600 டன்களுக்கு குறையாமல் கார்க் பட்டை ஐக்கிய நாடுகளுக்கு அனுப்பப்படுகிறதாம். "கருங்காலிக் கட்டைக்கு நாணுக் கோடாலி இருப்புக்கலித் தண்டுக்கு நாணு" வதுபோல் பல பொருள்களையும் வெட்டும் இரும்புக்கத்தி கார்ப்பட்டையை வெட்டுவதால், சீக்கிரம் மழுங்கிவிடுமாம். ஆயினும் கிளாஸ்கோவில் கூட்டுவியாபாரம் செய்யும் சிலர் கார்க்கை நறுக்க அற்புத யந்திரம் செய்து இருக்கின்றனர் என்றும் அதன் உதவியினால் மணி ஒன்றுக்கு 72 டசன் கார்க் (அடைப்பான்கள்) செய்து வருகிறார்களென்றும் தெரிகிறது.

கார்க்கின் தன்மை:—நெகிழ்ந்துறழும் தன்மை கார்க்குக் குண்டு. ஆதலின் அது தன் பருமனிற் குறைந்த சிறு துவாரங்களில் திணித்தாலும் உள்ளே செல்லக்கூடியதாகும். அன்றியும் அது

அடங்கி ஒடுங்கிச் சுருங்கக் கூடியதும் காற்றை ஒரு சிறிதும் உட்புகவொட்டாததுமாக இருக்கிறது. அது சீக்கிரம் கெட்டுப்போகாமல் நீடித்து நிற்குந் தன்மை வாய்ந்தது. கனமின்றி இலேசாயிருக்கும் மிருதுவான மங்கல் நிறமுள்ள வஸ்து அது. உஷ்ணம் சத்தம் மின்சாரம் முதலியவற்றை உள்ளே செல்லவிடும் தன்மை அதற்கில்லை; ஆகலால் அதற்குள்ளிருக்கும் பதார்த்தம் எதுவும் ஆவி உருக்கொண்டு வெளிச்செல்லாது.

உபயோகங்கள்:—முற்கூறிய சிறந்த தன்மைகள் பல கார்க்குக்கு இருப்பதால் புட்டிகளுக்கு அடைப்பானாகவும் பீப்பாய்களுக்குப் பருமுளையாகவும் உபயோகிக்கக் கூடிய சிறந்த பொருள் இதனினும் வேறில்லை யென்றே துணிந்து கூறலாம்.

(2) தங்கள் வலைகள் தண்ணீரில அமிழ்ந்தாவண்ணம் செய்பவர்கள் 'மோட்டர்' கார்க்கை வலையோரங்களில கட்டிவைப்பார்கள் என்று முன்னமேயே கூறியிருக்கிறோம்.

(3) கப்பல்களிற் பிரயாணம செய்வோர் கவலையீனத்தால் கடலில் தவறி விழும்போது அவர்கள் உயிர் தப்புமாறு கார்க்கினால் செய்த ஒருவகைச் சட்டையையும் அரைக்கச்சையையும் கப்பலில உள்ளோர் எறிவார்கள் என்றும் அவற்றின் உதவியால் விழுந்தோர் உயிர் தப்பிக் கப்பலேறுவரென்றும் சொல்லப்படுகிறது. இவை உயிரைக் காப்பாற்றுவதால் முறையே "உயிர்ச்சட்டை" என்றும "உயிர்க் கச்சு" என்றும் பெயர்பெறும். மாலுமிகள் இக்கார்க்கால் சேமப் படவுகள் அல்லது ஜீவரக்ஷை ஓடங்கள் செய்துகொள்வார்கள்.

(4) கார்க்கின் மெல்லிய பட்டைகள் பாத ரக்ஷைகளுக்கு அடித் தோலாக உபயோகப்படும்

(5) கைகால் இழந்தோர்களுக்குப் போலிக் கை கால்களும், நானாவித பொம்மைகளும் செய்ய கார்க்கு உதவும்.

(6) அதன் உட்பட்டை, தோல் பதனிட மிக்க பிரயோஜனப் படும்.

இன்னும் என்னென்ன விதங்களாய் இது உபயோகப்பட இருக்கிறதோ!

பத்திராசிரியர்.

# * சிலம்பியும் ஈயும்.

“என்னுடை அறைக்குநீ எழுந்திசைந் தருள்வையோ?
என்றும்நீ கண்டே இராததோர் அழகிய
சிறியசம் பாஷணை அறைஅது. மற்றதன்
உள்ளே செலும்வழி ஒரு சுழற்படி ஆம்.
அவ்விடம் வந்ததும் அழகிய பொருள் பல
உனக்குக் காட்ட 'உள்ளன.'” என்றொரு
சிலம்பி ஓர் ஈக்குச் செப்ப, ஈ, “மாட்டேன்.
மாட்டேன். எனை வரக் கேட்டல்வீண். ஏனெனில்,
உன்சுழற் படிவழி உயரச் சென்றவர்
எவரும் மீண்டும் இறங்கிக் கீழ்வர
என்றுமே இயலாது” எனஉரைத் ததுவே.

II

“நெடுந்தொலை மேலே நீ பறந் திருத்தலின்
இளைப்புமே லிட்டே இருப்பா யென்று
நிச்சய மாக நினைக்கின் றேன்யான்.
என்சிறு படுக்கையில் இருந்திளைப் பாறுதி.
அதனைச் சுற்றி அழகார் திரை உள.
விரிப்போ நேர்த்தியும் மென்மையும் வாய்ந்தவை.
ஆதலின் சுற்றிளைப் பாறநீ இசைவையேல்
சுகமுற அடக்கமாச் சுற்றிஉள் கிடத்துவேன்”
என்றுஅச் சிலம்பி இயம்பவும் சிற்றீ,
“மாட்டேன். யான் வர மாட்டேன். ஏனெனில்,
உன்படுக் கையிற்படுத் துறங்கினர் என்றுமே
மீண்டும் எழுந்து விழித்திலர் என யான்
பன்முறை கேள்விப் பட்டுளேன்” எனவே;

* இது Mary Howitt என்ற ஆங்கில மாது செய்த “The Spider & The Fly” என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பு.

## III

சூதார் சிலம்பி அப் பேதையை நோக்கி
அன்பார் நண்ப! நின்பால் என் அகத்
துள்ளமெய் அன்பை உணர்த்த என்செய்வேன்?
சுவையார் பண்டம் எவையோ, அவை எலாம்,
உணவு சாலையில் ஒருங்கே வைத்துளேன்.
உன்வர வால்என்க்கு உண்டுமெய்த் திருப்தி.
சிறிதேனும் உன்னைத் திருவுராம் பற்றுதி."
என்னலும், அச்சிற் றீ அதை நோக்கி
"மாட்டேன். அதுசெய மாட்டேன். அன்புடை
ஐயா! சற்றும் அதுமுடி யாது. உன்
உணவு சாலையில் உள்ளன யாவையும்
பற்றிக் கேள்விப் பட்டுளே னல்அதை
மீண்டும் பார்க்க வேண்டேன் நான்." என,

## IV

பின்னும்அச் சிலம்பி "பிரியமார் பிராணி! நீ
சொற்சா துரியன். பொற்பார் அறிஞன். உன்
மெல்லிய சிறகின் நல்வனப்பு என்னே!
உன்னுடை விழிகளின் ஒளிதான் என்ன! ஓர்
சிறியகண் ணாடிஎன் அறையில் ஓர் கட்டில
நான்வைத் திருக்கிறேன். நண்ப! ஓர் கணப்போது
உட்புகின் உன்னுடை உருவுகாண் பாய்." என,
"அன்பார் ஐய! நின் இன்பார் மொழிக்கு
வந்தனம். காலை வந்தனம் உனக்கிவ்
வேளைசந்து இன்னொரு நாளை யான் வருவேன்."
என்று மறுமொழி ஈ உரைத் ததுவே.

## V

"செருக்கார் பேதை ஈ சீக்கிரம் திரும்பும்;"
என்னச் சிலம்பி இனிதுணர்ந் தேஅவ்
இடம்விட் டகன்று தன் இருப்பிடம் சென்றுஆங்

கோர்சிறு மூலையில் உபாயமாய் நண்ணிய
நூல்வலை யொன்றை நாற்றி அதில் ஈயை
உண்ணுதற் காகும்ஓர் உண்கலம் அமைத்தது.
அமைத்ததும் வாயில் அண்டையில் நின்று
"முத்து வெள்ளிஇ ழைத்த நின்சிறகுடன்
இங்குவா! இங்குவா! எழிலார் ஈயே!
பச்சைஊ தாநிறம் பதிந்ததுன் போர்வை.
உச்சியின் மேல்உனக் குள்ள தோர் கொண்டை.
ஒளிரும் மணிபோல் உனக்குள விழிகள்.
என்னுடை விழிகளோ ஈயமே போல
மங்கலாய் உள" என மகிழ்ச்சியாய்ப் பாடவே,

## VI

அங்கோ! அங்கோ! அதிசீக் கிரத்தில் அவ்
அறிவிலாச் சிற்றீ அச்சிலம் பியின் நய
வஞ்சகம் வாய்ந்த வார்த்தையை நம்பிப்,
பளபளத் திடுங்கண், பச்சைஊ தாநிறம்,
என்னும் இவற்றையே எண்ணியும், தன்னுடைச்
சிரசின் மேல்திகழ் சிகரச் சிறப்பையும
காணலாம் எனும்மனோ கற்பனை யுடனும்
சிவ்வென ஒலிக்கும் சிறகொடு பறந்து மேல்
வரவரக் கிட்டி வந்தது மெல்லென.
(அறிவிலாப் பிராணி! அதன் கதி என்னே!)
கடைசியில் அந்தக் கபடச் சிலம்பி
குபீர் எனப் பாய்ந்ததைக் குரூரமாக் கௌவித்
தன்சிற் றறையைச் சார்ந்த ஓர் இருண்ட
கூட்டுக் குத்தன் குறுஞ் சுழற் படிவழி
இழுத்துச் சென்றது. இதற்குப் பின்னர்
என்றும் ஈகீழ் இறங்கவே இல்லையே!

## VII

இக்கதை படிக்கும் யாவரும் கேண்மின்.!
இனியா யினும்நீர் இருமின்எச் சரிக்கையாய்.

பயனில் அறிவிலா நயமொழி களுக்கு நீர்
என்றும் செவிகொடா திருக்குமா வேண்டுவல்.
கபடா லோசனைக் காரர்கள் எவர்க்கும்
காதும் மனமும் கண்ணும் கவிமின்.
இந்தச் "சிலம்பியும் ஈயும்" என் கதையால்
உயர் மதிவாய்ந்து நீர் உலகிலுய் வீரே.

ம. கோபாலகிருஷ்ணையர்,
மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதி.

---

# இலங்கை வேடர்கள்.

---

"விட்." என்னும் பதத்திலிருந்து "வேடர்" என்பது வந்தது. "விட்" என்பது "விடுதல்" "எய்தல்" எனப் பொருள்படும். இது "விடு" என்னும் வினையடியாய்ப்பிறந்த தொழிலாகுபெயராயுளது. எனவே, "அம்பு எய்பவர்கள்" என்றும் "வேட்டைத் தொழிலே யுடையவர்கள்" என்னும் அருத்தமாம். இவர்கட்குக் "குன்றவர்" "கானவர்" "குறவர்" "மலைவாழ்நர்" "கிரிசரர்" "புளிந்தர்" எனப் பல நாமமுண்டு. இவர்கள் இலங்கையிலே மத்திய மாகாணம் உவா மாகாணம் கீழ்மாகாணங்களில் உள்ள மலைகளிலும் காடுகளிலும் ஏராளமாக வசிக்கின்றனர். தற்காலம் இவர்களது தொகை ஐயாயிரத்துக்கு மேலாம்.

இவர்கட்குக் கல்வியும் நாகரீகமும் இல்லை. மிகச் சீர்திருத்த மற்ற நிலையில் தற்காலம் இருக்கின்றார்கள். இவர்கள் தரிப்பது பெரும்பான்மை மரவுரியே. ஆடவராயினும் அரைக்குக்கீழ் ஒரு சிறு உடைதரித்துக் கொள்வார்கள். நமது காருண்ணிய ஆங்கிலேய அரசினர் இவர்கட்கு வேண்டிய உதவிகள் புரிந்தும் இவர்கட்கு வஸ்திரம் உடுக்கப் பழக்கியும் ஆங்காங்கு வித்தியாசாலைகள் ஸ்தாபித்தும் இவர்களை நன்னிலைக்கும் முன்னிலைக்கும் கொண்டுவர மிக்க சிரமப்பட்டு வருகின்றனர். இவர்கள் கல்வி செல்வம் நாகரீகம் முத

சியவற்றால் முன்பு மற்றெச்சாதியாரைப் பார்க்கிலும் எவ்வளவு மேன்மையடைந்திருந்தார்களோ அவ்வளவு தற்காலம் நாகரீகமற்ற மிலேச்சர்களாக விளங்குகின்றனர்.

இராம இராவண யுத்தத்தின் பின் இலட்சுமணரும் விபீஷணனும் இலங்கையை ஆண்டபொழுது ராஜத்துரோகியும் சகோதர காதகனும் விசுவாசகாதகனும் ஆகிய விபீஷணனுடைய ஆளுகையின் கீழிருந்து வாழ மனம் ஒருப்படாராய் மலைகளிலும் காடுகளிலும் ஒளித்தோடியவர்களும் இராவண ராஜனுடைய சைனியங்களும் பிரஜைகளுமான இராக்ஷதர்களே இந்த வேடர்களாம். ஆரியர்களால் அவ்வப்போழ்தில் இராக்ஷதர் என்றும் இயக்கர் என்றும் கின்னரர் என்றும் அழைக்கப்பட்டவர்கள் இந்த இராக்ஷத வேடர்களேயாம்.

இவர்கள் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் வசித்த பூர்வீக குடிகள். மத்திய ஆசியாவினின்று ஆரிய குடும்பத்தார், நாலுதிசைகளிலும் பரவிச்சென்று குடியேறினகாலத்துக்கு முன்னமேயே, இவர்கள் தண்டகாரணியம் முதல இலங்கை ஈறாயுள்ள தேயங்களில் பூர்வகுடிகளாய் வசித்தனர். இப்பூர்வகுடிகள், கிறிஸ்தவாப்தம் தொடங்க எவ்வளவோகாலத்திற்கு முன்னமேயே ஆசியகாட்டினின்றும் வந்து குடியேறிய ஓர் ஜாதியார் எனவும், சிறைவைச் சார்ந்த தீபேத்தினின்றும் ஆதியில் வந்து குடியேறினார்கள் என்றும் சிலர் அபிப்பிராயப் படுகின்றனர்

ஆரியர்கட்கும் இப்பூர்வ குடிகட்கும் பலகால நெடும்போர் நடந்தது. எதிரில் ஆரியரே வெற்றிமாலை சூடினர். ஆரியரால் வெற்றி கொள்ளப்பட்டமை காரணமாக இவர்களடிமைகளாக்கப்பட்டதுமன்றித் தற்காலம் திரான்ஸ்வால் தேயத்தில் ஆங்கில அரசின் ஆளுகையின்கீழ் சமத்துவப் பிரஜா சுதந்தர உரிமையுடையராகிய இந்தியர்கட்கு விரோதமாய வருண இனம்பற்றிய போலியுரிமைகொண்ட "போவர்"களால் சட்டங்கள் ஏற்படுத்தப் பட்டவாறே, இவர்கட்கு விரோதமாகப் பற்பல சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறு சட்டங்கள் ஏற்பட்டதுமன்றி அவர்கள் "மிலேச்சர்" என்றும் "அநாரியர்" என்றும் "கிருதா" என்றும் "செர்டியவர்" என்றும் நிந்தித்து ஒதுக்கப்பட்டனர்.

இவர்கள் பாஷை தமிழும் சிங்களமும் கலந்துள்ள தோர் பாஷை. தீக்கடை கோலினாலும் தீத்தட்டிக் கல்லினாலும் அக்கினி யுண்டாக்கிக் கொள்வார்கள். பலவகையாகிய காட்டுமிருகங்களின் இறைச்சியே இவர்களுக்குப் பிரதான உணவுப்பொருள். தேனும் தினைமாவும் அத்துடன் சேர்க்கப்படும். இப்போது சிற்சிலர் கமச் செய்கை (வியவசாயத்து)க்கும் தொடங்கியிருக்கின்றனர்.

வேட்டுவப் பெண்கள் அழகிலும் வடிவிலும் சிறந்தவர்கள். முற்காலத்துள்ள ஆரியர்கள் இவ்வேட்டுவ குலத்திலேயே அதிகமாகப் பெண்கொள்வது வழக்கம். தற்காலமும் இவ்வகையிலுள்ள மற்றைய ஆதிகுடிகளாகிய சிங்களவரும் தமிழரும் சோனகரும் இவ்வேடர்களுக்குள் பெண் கொண்டு கொள்வது வழக்கம். இவ்வேடர்கள் தற்காலம் இவ்வளவு தாழ்ந்த நிலையில் இருந்தபோதிலும் இவர்கள் பூர்வத்தில் கல்வி செல்வம் பேராவலிமை முதலியவற்றால் மிக மேலாக விளங்கியவர்களே.

துரோணாசாரியர் போல உருவமைத்து வில்வித்தை கற்று அவரது மாணவர்களாகிய ஆரிய அரசர் யாவரிலும் மேலோங்க, அது கண்ட ஆரிய மாணவர்கள் பொறாமைகொண்டு வலக்கைப்பெருவிரலைக் குருதக்ஷிணையாகக் கேட்பிக்க அவ்வாறே தன் வலது கைப்பெருவிரலை தக்ஷிணையே தந்த ஏகலைவனும் இக்குலத்தவனே. சிவானந்தலகிரியிலும் பெரிய புராணத்திலும் திருவாசகத்திலும் நக்கீரதேவர் கபில்தேவர் அருளிச்செய்த திருக்கண்ணப்ப தேவர் திருமறத்திலும் வியந்து கூறப்பட்ட கண்ணப்பநாயனாரும் வேட்டுவ குலத்தவரே.

"கிராதர் மங்கையும் பராசரன் மதலையும் கெழுமி
விராவு கில்லுணை மிசைந்தினர் மிசைந்திடு தன்மை"

எனக்-கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் கூறிய வேடுவகுலமும் இக்குலமே.

தி. சிவசிதம்பரம் பிள்ளை,
யாழ்ப்பாணம்.

உ

# மாலினீமாதவம்

அல்லது

# தர்மவிஜயம்.

(102-ம் பக்கத் தொடர்ச்சி).

---

தினகரன் துக்கத்தில் மூழ்கித் தன் கத்தியை மறுபடி உறையில் போட்டுவிட்டுப் பிரமித்து ஏதேதோ ஆலோசித்துக்கொண்டு நின்றான்.

இக்கொடிய காட்சிகளைக் கண்ணுற்ற மாலினி ஓடி வந்து தினகரன் கால்களில் விழுந்து, கைகளை உயர்த்தி "அண்ணா! மன்னிக்க வேண்டும். மாதவன்மேல் ஒரு குற்றமுமில்லை ஐயோ! நாமெல்லாம் எவ்வளவு அன்புடன் வாழ்ந்து வந்தோம்!. அவ்வன்புக்குக் குறைவு காலமும் வந்து விட்டதா? அண்ணா! அண்ணா! அண்ணா!!" என்று தீனமாய்த், தினகரனைக் கெஞ்சிப் பிரார்த்தித்தாள். தினகரன் ஒன்றும் சொல்லத் தோன்றாதவனாய்த் திடீரென்று திரும்பி 'வஸந்த விலாஸ'மென்ற தன் அரண்மனை நோக்கிச்சென்றான்.

இதற்குள் மாலினியும் துக்கத்தால் மயங்கி மூர்ச்சையடைந்தவளாய் அம்மரத்தடியில் சாய்ந்தாள். கமலா ஓடிவந்து மாலினி தன் முகத்தில் தண்ணீர் தெளித்து, ஓர் தாமரையிலையால் விசிறிச் சற்றுக் களைப்பாற்றிப் பிறகு, அவளையழைத்துக்கொண்டு அரண்மனை நோக்கிச்சென்றாள்.

மாதவனும், இவ்வதிகாலையில், இவ்வளவு சீக்கிரத்தில், இவ்வளவு காரியங்கள் நடந்ததை யாலோசித்துக்கொண்டு, "ஏதோ இன்று விடிந்தவேளை நல்ல வேளை இல்லை. ஒன்றின்மேலொன்றாய் ஆபத்துக்கள் நேரிடும்போல் தோன்றுகின்றது. என்ன நேரிடப்போகிறதோ?!" என்று பலவாறு சிந்தித்துக்கொண்டு தன் நினைவற்றுச் சூத்திரப் பாவை போல அந்தச் சோலையை விட்டு வெளியே சென்றான்.

---

அத்தியாயம் 3.

# பூர்வகதை.

இச்சரித்திரத்தை வாசிக்கும் நமது நண்பர்கள் இனி இக்கதா நிகழ்ச்சியைத் தெளிவாய் எளிதில் அறிந்து அனுஸரிக்குமாறு இதன் பூர்வ விருத்தாந்தங்களைச் சுருக்கமாய் இங்கு எழுதுகின்றோம். இவைகள் பெரும்பாலும், அக்காலத்துப் பத்திரிகைகளினின்றும், அக்காலத்து ப்ரத்யக்ஷ ஸாக்ஷிகளாயிருந்த பெரியோர்களாலும் இன்னும் பலவித ஆதாரங்களைக்கொண்டும் எழுதப்பட்டு இருக்கின்றன.

பாண்டிய அரசர்க்குப் பிறகு இந்நாட்டை யரசாட்சிசெய்து வந்த நாயக்கர் வம்சத்தரசர்களுள் முதல்வராகிய விசுவநாத நாயக்கர் காலத்தில், ராணுவம முதலான அரசாட்சி சௌகரியத்தின் பொருட்டு இப்பாண்டிய நாடானது 72 பாளையப்பட்டுகள் அல்லது ஜமீன்தாரிகளாகப் பிரிக்கப்பட்டு, வருஷந்தோறும் ஒவ்வொரு ஜமீன்தாரும் குறிப்பிட்ட கப்பம் செலுத்தி வருவதுமல்லாமல், யுத்தம் நேரிடுங் காலத்தில் குறிப்பிட்ட சேனையும உதவிபுரியவேண்டுமென்று ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இம்மணிபுரம் ஜமீன்தாரியானது மேற்கூறிய 72 பாளையப்பட்டுகளுள் ஒன்று.

இந்த ஜமீன்தாரியை ஆண்டுவந்தவர்கள் பெருமபான்மை தவறாது கப்பம் செலுத்திவந்ததுமன்றி விசேஷமாய் முறையே நாயக்கர் ஸமஸ்தானம், கர்நாடக ஸமஸ்தானம், ஆங்கிலேய ராஜாங்கம் இவைகளிடத்தில் பக்தியுள்ளவர்களாய், தங்கள் குடிகளுக்கும் யாதொரு குறைவும் செய்யாது தங்கள் நாட்டை யாண்டுவந்தனர்.

இப்பொழுது நமது கதாகாலத்தில் இந்நாட்டின் ஜமீன்தார் 'கிருஷ்ணராஜ்' என்பவர். இவருக்குச் சுமார் 40 வயதிருக்கலாம். இன்னும் விவாகமாகவில்லை.

நமது சரித்திரகாலத்துக்குச் சுமார் 22 வருஷங்களுக்கு முன், இந்நாடானது ப்ரகிருத ஜமீன்தாரின் தமையனான 'ராமராஜ்' என்பவரால் அரசாளப்பட்டு வந்தது. 'ராமராஜ்' 'கிருஷ்ணராஜ்' என்பவர்களின சகோதர வாத்ஸல்யமானது உலகில நிகரற்றதாயிருந்தது.

'ராமராஜ்' தன் மனதுக்கிசைந்த மனைவியை மணம்புரிந்து இன்பமாய் வாழ்ந்துவரும் நாளில் தெய்வகிருபையால், சுற்றிச் சிறந்த அம்மாதுசிரோமணி கர்ப்பமுற்றுத் தக்க சரியான காலத்தில் ஓர் ஆண் சிசுவைப் பெற்றாள். சென்னையில் கல்வி பயிலச்சென்றிருந்த 'கிருஷ்ண ராஜா'வும் இச்சந்தோஷ ஸமாசாரம் கேட்டுத் தனது நகர்வந்து, அக்குழந்தையினிடத் தன்பு பாராட்டிச் சிறிது காலம் தனது தமையன் முதலானவர்களுடன் ஸந்தோஷமாய்க் காலங்கழித்து மறுபடி திரும்பிச் சென்றான்.

இக்காலத்தில் திவானாய் இருந்தும் ராஜாராம் என்பவரே அக்காலத்திலும் திவானாயிருந்தார். அவருக்கு மணிபுரம் மகாராஜாவினிடத்தில் இருந்த பக்தி விசுவாஸமும், அன்பும், நம்பிக்கையும் அளவிடக் கூடாததா யிருந்தது.

முன் கூறியபடி 'ராம் ராஜாவும்' அவர் இன்ப மனைவியான மகாராணியும், புதிதாய்ப் பிறந்த சிசுவும் அதிக சந்தோஷமாய் வாழ்ந்து வந்தார்கள் சிசுவுக்கு ஆறுமாதமிருக்கலாம். ஒருநாள் மாலையில் ராமராஜாவும் ராணியும் குழந்தையைத் தாதியிடம் ஒப்புவித்துவிட்டுப் பரிவாரம் யாதொன்றுமின்றி ஏகாந்தமாய் ஐவர்மலைச் சார்பிலுள்ள கிருஷ்ணன் கோவில் உத்ஸவத்துக்குச் சென்றிருந்தனர். இரவு 10 மணிநேர மிருக்கலாம். அரண்மனையில் தாதியிடம் ஒப்புவிக்கப்பட்ட அருமைக்குழந்தை 'மாந்தம்' எனனும் வியாதியால் அதிகக் கஷ்டப்படுவதாய் திவானிடமிருந்து அவசர ஸமாசாரம் வரவே ராம்ராஜாவும் ராணியும் அதிக வருத்தமடைந்து பரபரப்புடன் அவ்விடத்தைவிட்டு, இருட்டைக்கூடப் பொருட்டாயெண்ணாது காட்டு மார்க்கமாய் அரண்மனை நோக்கித் தனியே ஸாரத்தியம் செய்துகொண்டு திரும்பி வந்தார்கள். அரண்மனைக்குச் சற்றுத்தூரத்தில் அவர்கள் சில திருடர்களால் எதிர்க்கப்பட்டுக் கொலையுண்டார்கள். அவர்கள் மேல் அணிந்திருந்த ஆபரணங்களும் காணமற்போயின. அரண்மனையில் சிசுவும் இறந்துபோய்விட்டது. மறுநாள், இறந்துபோன இம் மூவர்களுக்கும் ராஜ மரியாதையுடன் ஸம்ஸ்காரங்கள் நடந்தன.

இத்துக்க ஸமாசாரம் கேட்ட கிருஷ்ண ராஜா, தன் தமையன் மேலுள்ள அன்பால் அன்னவர் பிரிவாற்றாமல உருகி உடனே

மணிபுரம் வந்துசேர்ந்தார். "ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டா லும் மாண்டார் வருவரோ மாநிலத்தில்?" உண்ணிஉணவிேயழுதாலும் உயிரைக்கொண்டு வரலாமா? இறந்தவர்களுக்குப பின உத்தரக கிரி யைகள் நடந்தன. கிருஷ்ண ராஜா தான் தன்தமையன் மேற்கொண் டிருந்த பகதி, அன்பு, இவைகளின ஞாபகச்சின்னமாய் ராமராஜா வும், ராணியும் கொலையுண்ட இடத்தில் ஓர் சிறு கோவில் கட்டி அங் கே அவர்கள ப்ரதிமைகளையும், சிசுவின் ப்ரதிமையையும் கைதேர்ந்த சிற்பிகளால் நிர்மித்து, அக்கோவிலில் ஸ்தாபனம் செய்வித்தார்.

மனமானது மதத்த குதிரையைப் போன்றது. அதை அறி வெனும் கடிவாளத்தால் அடக்கியாண்டாலல்லது தன் போக்காகத் திமிறிச்சென்று அநேக துன்பங்களை விளைவித்து வரும். அது சிறிது நேரங்கூடச் சும்மாவிராது எப்பொழுதும் சலித்துக்கொண்டே யிருக்கும். உண்மையான காரணத்தை யறியாவிடினும் ஏதாவ தொன்று கல்பிப்பதே அதன் ஸ்வபாவம். "இம்மணிபுரம் கொலை" யின் காரணமும், கொலைநடந்த விதமும், கொலை செய்தவர்களையும் பற்றிப் பலர் பலவிதமாகத் தர்க்கிக்க ஆரம்பித்தார்கள. சிலர், மணி புரம் ஜமீந்தார்களின் ஜன்மப் பகைவரான கள்ளன் கோட்டைத் தலைவர்களால இக்கொலை நடந்திருக்கவேண்டும் என்றும், சிலர் "இக்கொலை பகைவரால் நடந்திருக்கமாட்டாது". திருடர்களால் பொ ருளாசையால் நடந்திருக்கலா மென்றும், சிலர், ராஜத்துரோகிகளான சில குடிகளால் நடந்திருக்கவேண்டும எனறும இவ்வாறு பற்பல விதமாய் விதர்க்கம் செய்ய ஆரம்பித்தார்கள். இக்கொலை விவ ரம், இவ்விதமாகச் சித்தாந்த நிலைமையிலேயே யிருந்து பழங்கதை யாய் மறந்து போனதேயொழிய யாதொரு விதமான உண்மையும ருஜுவுக்கு வரவில்லை.

சட்டப்படி கிருஷ்ண ராஜா அடுத்த "வாரிஸ்" ஆக ஜமீன்தாரி யையடைந்தவராயினும், தமையனிருந்து ஆளப் பார்க்கக்கூடாத அவ்வளவு துர்ப்பாக்கியனான தான் நேரிலிருந்து ஆள மனமில்லாமல் சென்னையிலி ருந்துகொண்டே திவான் ராஜாராம் மூலமாய் ஸமஸ்த காரியங்களையும் நிர்வஹித்துவந்தார். எப்பொழுதாவது ஏகதேசத்தில் வருஷத்துக் கொருதடவை அல்லது இரண்டு வருஷங்களுக்கொரு

தடவை மணிபுரமடைந்து சிலநாளிருந்து தமையனற்ற ராஜ்யத்தில் மனம் வெறுத்து மறுபடி சென்னைக்குத் திரும்பி விடுவார். இவருக்கு இயற்கையாகவே உலக இன்பங்களில் வெறுப்பு ஏற்பட்டு விட்டபடியால், நண்பர்கள் பலவிதமாய்ப் போதித்தும் கேளாது, விவாஹம் இல்லாமலே இருந்து வருவாராயினர். இவ்விதமாக 22 வருஷங்கள் கழிந்தன. நிற்க.

## பாலூர் ஜமீன்.

முன் கூறிய மதுரை ஸம்ஸ்தானத்தைச் சேர்ந்த 72 ஜமீன்தாரிகளில் 'பாலூர்' என்பதும் ஓர் புராதன ஜமீன். இப்பொழுது இது திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்திருக்கிறது.

பாலூர் ஜமீன்தாரியை ஆண்டுவந்த ராஜவம்சத்தில், இச்சரித்திரத்துக்கு முன்னிருந்தவர் வம்சசேகரன் என்பவர். அவர் யாதொரு ஸந்ததியுமில்லாமல் சிறிது காலத்துக்குமுன் இறந்து போகவே, அவருடைய அடுத்த சகோதரர் குமாரரும், நமது கதா நாயகியின் பிதாவுமான குணசேகரர் அஜ்ஜமீன்தாரியைப் பட்டம் பெற்று நீதி தவறாது ஆண்டுவந்தார்.

இஃதிப்படியிருக்க, மதுரை ஜில்லாவில் புதூர் என்னும் கிராமத்தில் 'சிதம்பரம் செட்டியார்' என்றும், 'முத்து செட்டியார்' என்றும் ஜன்மப் பகைவரான இரண்டு செட்டிகள் இருந்தார்கள். அவர்கள் தக்கப் பணக்காரர்கள். ஒவ்வொருவருக்கும் 30 லக்ஷம் ரூபாய் பெறுமான சொத்துக்களுண்டு. இது தவிர அக்கரைச் சீமையிலும் சுமார் 10 லக்ஷத்துக்கு லேவாதேவியுண்டு. இவர்கள் செல்வத்துக்கும் கௌரவத்துக்கும் தக்கபடி, அநேக 'கோர்ட்டு'களில் 'ஸிவில்' வியவஹாரங்கள் எப்பொழுதும் நடந்துகொண்டேயிருக்கும். தினசரி ஒரு வியாச்சியமாவது 'தாக்க'லாகாமல் போனால் நமது செட்டியார்களுக்கு நித்திரை வராது. கொஞ்ச காலத்துக்குமுன் நமது செட்டியார் இருவர்களும் வைக்கோற் போரில் மாடு மேய்ந்த விஷயமாய்க் கலகம் முதலானவை நடந்து 'க்ரிமினல்' விவகாரமாய் அது 'ஸிவில்' ஸம்பந்தமானது என்று தள்ளப்பட்டு, மறுபடி 'ஸிவில்' வழியாய் மூன்று 'கோர்ட்டு'வரை சென்று கடைசியாய், சட்ட அம்சத்தில்

இடங்கொடாததால் சென்னை 'ஹைகோர்ட்'டார் அவர்களாலும் அங்கீகரிக்கப்பட மாட்டாமல் போயிற்று. 'ப்ரீவிகௌன்ஸில்'லுக்குப் போகத் தக்கதில்லையென்று சில தக்க 'ஹைகோர்ட்டு வக்கீல்கள்' சொன்னபடியால், அது அதனுடன் தவிர்ந்தது. அதில் இருதரப்பினர்களுக்கும் சுமார் 2 லக்ஷம் ரூபாய்வரைதான் செலவாயிருக்கும். அந்தக் 'கேஸ்' நடந்த விமர்சையையும், பட்டணத்திலிருந்து நாள் ஒன்றுக்கு 500 ரூபாய் கொடுத்து 'க்ரிமினல்' விசாரணைக்குப் 'பாரிஸ்டர்'களையும், "ஸிவில்" விசாரணைக்கு 'ஹைகோர்ட்டு' வக்கீல்களையும் கொண்டு வந்ததையும், அவர்கள் பேசின பேச்சுக்களையும், "அடிச்சு அடிச்சு" ருஜுவென்று 'பாயிண்டு'க்களையும் 'லாபாயிண்டு'களையும் எடுத்துப் பேசினதையும், பொருளைப் பொருள் என்று பாராமல் எவ்வளவானாலும் சரியென்று போட்டிபோட்டுச் செலவுசெய்து மூன்று 'கோர்ட்'டுவரை 'கேஸ்' நடத்தின அதிசயத்தையும், நமது செட்டியார்களும் அவர்களின் உபக்ரஹங்களாகிய பரிவாரங்களும் தலையாட்டித் 'தலையாட்டி' உத்ஸாகமாய் இன்னும் வர்ணிப்பார்கள்.

விதியை மதியால் வெல்லமுடியுமா? இவ்வளவு செல்வச்செருக்கடைந்த முத்துசெட்டியாருடைய மனஸ்தாபமானது சில காரணங்களால் நமது பாலூர் மகாராஜா குணசேகரருக்கு நேர்ந்துவிட்டது.

காலம் சென்ற வம்சசேகரருக்கு, மூன்றும் சகோதரரும், குணசேகரருக்குச் சிறிய தகப்பனருமான வீரபத்திரர் என்று ஒருவரிருந்தார். வம்சசேகரருக்குப்பின் அடுத்த 'வாரிஸ்' வீரபத்திரரேயொழிய குணசேகரரல்லர் வென்றும் அதற்காக'ஸிவில்'வ்யவஹாரங்கள் பலமாய் நடக்கப் போகிறதென்றும் வெகுநாளாய் வதந்தி பரவிக்கொண்டிருந்தது. வீரபத்திரருக்குப் போதுமான 'ஐவேஜ்' இல்லாததால், வ்யாஜ்யம் தொடங்கமுடியாமல் காலம் சென்றுவந்தது. எரிகிற நெருப்பில் எண்ணெய் மழை பொழிவதுபோல், வீரபத்திரருடன் முத்துசெட்டியார் சேர்ந்துகொண்டார். எப்படியாவது இந்த குணசேகரரைத் தொலைத்து விடுகிறது என்று வீராவேசத்துடன் சபதஞ் செய்தார்கள். முத்து செட்டியார் இரண்டு மடங்கு எழுதி வாங்கிக்கொண்டு ஏராளமான பொருள் செலவு செய்ய ஆரம்பித்தார். திருநெல்வேலி 'சப்கோர்ட்'டில் 'வயாஜ்யம்' 'தாக்க'லாயிற்று.

எதிர்வாதம் செய்யப்போதுமான பணமில்லாமல் குணசேகரர் தவிக்கையில், நட்ப தாசிகளாகிய அடைப்பககாரர்கள், முத்து செட்டியாரின் ஜன்மப் பகைவரான சிதம்பரஞ்செட்டியாருக்கும், குணசேகரருக்கும் சிநேகம் செய்துவைத்தார்கள். தம் அந்தஸ்துக்குத் தக்கபடி பெரிய 'கேஸ்' ஒன்றும் 'பெண்டிங்'கில்லாமல் தவித்துக்கொண்டிருந்த சிதம்பரஞ்செட்டியாரும போட்டி போட்டுப் பொருளுதவிசெய்ய ஆரம்பித்தார்.

அதிகமாய் வளர்ப்பானேன்? 'ஸப்கோர்ட்டில்,' பிரதிவாதிக்கனுகூலம். 'ஹைகோர்ட்'டில், வாதிக்கு அனுகூலம். ஜமீன்தாரியை வாதிவசம் ஒப்பிவித்து விடும்படி தீர்ப்பாய் விட்டது. இப்பொழுது இந்த 'கேஸ்' ப்ரிவிகௌன்ஸிலில் 'பெண்டிங்'காயிருக்கிறது.

நமது குணசேகரருக்குத் 'தினகரன்' என்றபுதல்வனும் மாலினி என்ற புதல்வியும் 'மாதவன்' என்ற அபிமான புதல்வனும் தவிர வேறு அடுத்த உறவினரில்லை மாலினி பிறந்த சிறிது காலத்துக்குப் பின் அவர் இன்பமனையாள் காலஞ்சென்றாள். தன்மனையாளிடத்துள்ள மெய்க்காதலால் வேறு மங்கை முகம பாராமலும், மறு விவாஹம் செய்துகொள்ளாமலும குணசேகரர் காலங்கடத்தி வருவாராயினர். தன்மெய்க்காதலியின் ஸ்தூல சரீரமானது இம்மண்ணிலிருந்து அழிந்துபோயிற்றே யொழிய, அவள் ஞாபகம் இன்னும் மறவாது இவர் மன உலகில் ஸஞ்சரித்துக் கொண்டிருந்தது.

முன்கூறியபடி, அப்பொலூர் ஜமீன் கேஸில் ஹைகோர்ட் தீர்ப்புக்காலத்தில், குணசேகரர் தனது சிறு குடும்பத்துடனும், சிறப்பான சில வேலைக்காரருடனும், சென்னையில வசித்துவந்தார். 'ஹைகோர்ட்டு அபயில்' அவர்க்கு விரோதமாயிற்று. ஜமீன்தாரி 'ரிஸீவர்' கையில் போய் விட்டது. என்ன செய்வார்? மறுபடி பாலூர் போவதற்கு மனம் துணியவில்லை.

இவ்வாறு மனம்வருந்திக் காலங்கழித்து வருகையில் ஒருநாள், நமது மணிபுரம் மகாராஜா கிருஷ்ண ராஜா தன் உயர்ந்த தோழரான குணசேகரரின் ஜாகைக்குவந்து, க்ஷேம ஸமாசாரம் விசாரித்து, அவர் நிலைமையைக்கண்டு பரிதபித்து, "அண்ணா! ஏன் வருந்துகிறீர்கள்?

தாங்கள் குடும்பத்துடன் மணிபுரம் சென்று நமது 'வஸந்த விலாஸ் பங்களாவில் வசியுங்கள்: தங்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்துகொடுக்கும்படி என் திவானுக்குத் ஞாபகப்படுத்தினேன்'' என்று அன்புடனே ஆதரவாய்க் கேட்டார். இந்த நிலைமையில் குணசேகரர் வலியவரும் தயவை விலக்கலாகாதென்று உணர்ந்து, சரியானபடி ஆலோசித்துவிட்டு அவ்வாறே செய்வதாய் ஒப்புகொண்டார் குணசேகரர் மணிபுரஞ்செல்லவேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டார். நிற்க

ஒருநாள் மாலையில் எழும்பூர் 'ஸ்டேஷனில்' ஓர் முதல்வகுப்பு வண்டியில், குணசேகரர், தினகரன், மாதவன், மாலினி அமர்ந்திருந்தார்கள். இவர்களுக்கு வழியனுப்ப மணிபுரம் ராஜாவும வந்திருந்தார். வண்டி புறப்பட ஐந்து நிமிஷம் செல்லுமானதால் தானும் அவ்வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு' குணசேகரரோடும், தினகரனோடும், மாலினியோடும், மாறி மாறித் தன் வைபவங்களையும், பெருமையையும், தனக்குச்சமீபத்தில் கிடைத்த 'ராவ்பகதூர்' பட்டத்தையும்பற்றி ஆத்மஸ்தோத்திரம் செய்துகொண்டார்.

''டாங்! டாங்!! டாங்!!!''. ஸ்டேஷனில் முதல் மணியடித்தது. கிருஷ்ணராஜா கீழே இறங்கினார். ''என்ன இந்த வருஷம் நம் மாலினிக்கு விவாஹம் ஹ! ஹ! ஹா!!—'' என்று குதூகல மந்தஹாஸம் செய்தார்.

குணசேகரர்:— ''ஆமாம் — நடக்கவேண்டியதுதான். இந்த 'கேஸ்' ப்ரதிகூலமானதால்—''

கிருஷ்ணராஜ்:—''அது ஒரு பக்கந்தான், மாலினிக்கு வயதாயிற்றல்லவா?—ஹ! ஹ! ஹ!—'' என்னையும் விவாஹம்செய்துகொள்ளச் சொல்லுகிறார்கள் நமது நண்பர்கள். ஹ! ஹ! ஹ!! சரியான—அழகான—நல்ல—அந்தஸ்துள்ள ஹ! ஹ! ஹ!!—வந்தால் செய்துகொள்ளலாமென்றுதான் நானும் நினைத்திருக்கிறேன். ஹ! ஹ! ஹ!.'

குணசேகரர்:—''ஆமப்பா, நீ இவ்விதமேஇருந்துவிட்டால் உன் வம்சம் ஸந்ததியற்றுப் போம், ஜமீன்தாரிணிய ஸர்க்காரில் எடுத்துக் கொண்டுவிடுவார்கள்''

கிருஷ்ணராஜ்:—"ஆமாம். நானுமப்படித்தான் நினைக்கிறேன். ஹ! ஹ! ஹ! நல்ல—அழகான—படித்த—ஹ! ஹ!! ஹ!!!—"

"டாங்டாங்! டாங்டாங்!! டாங்டாங்!!!" மறுமணியடித்தது. 'விஸில்' கேட்டது. வண்டி மெதுவாய்ப் புறப்பட ஆரம்பித்தது.

கிருஷ்ணராஜ்:—'அவஸர அவஸரமாய்' என்ன! மாலினி! ஹ! ஹ! ஹ! என்ன அன்று! நான் சொன்னது! ஹ! ஹ!! ஹ!!! மாலினி! கல்யாணம்! நான்! மாலினி—ஹ! ஹ! ஹ!! ஹ! ஹ! ஹ!!"

வண்டி இவா ஆத்திரத்தைக் கொஞ்சமேனும் கவனிக்காமல் வேகமாய்ப் புறப்பட்டு விட்டது.

(இன்னும் வரும்.)

R. S. நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.

---

## அரிச்சுவடியைப் பற்றிய ஓர் ஐய வினா.

---

அறிவிற் சிறந்த வித்வ சிரோமணிகளே!

நம் நாட்டுத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் பிரதமபாடமாயுள்ள அரிச்சுவடியில மற்ற பாஷைகளைப்போல், உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் உயிர்மெய்யெழுத்துக்களும் இருக்க அதற்குமுன்னதாக, ஹரி: ந, மோ, த், து, அ, ர், கூ, மூ, என்றவைகளை உபாத்தியாயர்கள் சொல்லிக்கொடுக்கின்றார்கள். அப்படியே யானும படித்திருக்கின்றேன். அவைகளை என சொல்லுகின்றாகளென்றெண்ணிப் பார்க்கும்போது அது ஒரு வாக்கியமாகக் காணப்படுகின்றது. அவ்வாக்கியத்திற்கு உண்மையான பொருளின்னதென்று என் அறிவிற்குப் புலப்படவில்லை. ஆனால் அரி யென்பது விஷ்ணுவுக்கோர் பெயரானதால் அது நூலுக்குக் காப்பாய் அமைந்திருக்கலாமோவென எண்ணின், இந்தச் சுவடியானது, சைவ, வைஷ்ணவரான இரு பாலரும் கற்கும் பொதுநூலானமையால் பொதுவான ஒரு தெய்வப்பெயரைக் காப்புக்கூறாது சிறப்புப் பெயரைக் கூறலாமா? கூறின் இருபாலரும் சம்மதித்திருப்பார்களா? என்னும் ஓர் ஐயமுண்டாகின்றது. ஆதலால் கல்விமான்கள் யாவரேனும் இவ்வரிய பத்திரிகையின் மூலமாய் இதன உண்மையைத் தெரிவிக்குமாறு வேண்டுகின்றேன்.

ஓர் சந்தேகி,
(கண்டனூர்வாசி)

# மேக ஸந்தேசம்.

## உத்தரமேகம்.

[48-ம் பக்கத் தொடர்ச்சி.]

18. துரிதமாய் (எனது அரண்மனைக்குள்) நுழைவதற்குச் சௌகரியமாயிருக்கும்படி, உடனே நீ ஓர் யானைக்குட்டிபோல் வேஷந்தரித்து, முன் கூறிய சிங்காரமலையின் ரம்யமான உச்சியில் தங்கி, சிறு சிறு ஒளியுடன் கூடியதும், மின்மினிப்பூச்சிகளின் வரிசைகளைப்போல 'பளிச்' 'பளிச்' என்று மின்னுவதுமான இளமின்னல்களாகிய உன் பார்வைகளால் எனது வீட்டுக்குள் பார்ப்பாய். (சிறு மின்னல்களை என் வீட்டுக்குள் அனுப்புவாய்.)

19. மெலிந்த சரீரமும், தகுந்த யௌவனமும், கூர்மையான பல்வரிசைகளும். கொவ்வைக்கனிபோல் சிவந்த அதரங்களும், மெல்லிய இடையும், திடுக்கிட்ட பெண்மானுடைய விழிகள்போன்ற அழகிய விழிகளும், ஆழமான நாபியும், இடுப்பின் கனத்தால் மந்தமான நடையும், ஸ்தனபாரங்களால் கொஞ்சம் வணங்கிய சரீரமும் வாய்ந்த இவ்வழகிய யுவதியானவள் ப்ரும்மதேவனால் படைக்கப்பட்ட யுவதிகளில் முதல் சிருஷ்டியாக இருக்கவேண்டும்.

20 எனது உயிருக்கு (இரண்டாவது) உயிராய் விளங்கும் என் காதலி, இணைபிரியாத நான் இவ்வாறு தூரத்திலிருப்பதால் ஆணைப்பிரிந்த பெண்சக்ரவாகம்போல் தனிமையாயும், அதிகமாய்ப் பேசாமலும் இங்ஙனம் விரகதாபத்தால், கஷ்டப்பட்டு இக்கொடிய நாட்களைக் கழிப்பதைப் பார்ப்பாய். (ஐயோ!) இப்பொழுது அந்த இளமாது பனியால் வருந்தும் தாமரை மடுவைப்போல் ரூபமே மாறியிருப்பாளென்று நினைக்கின்றேன்.

21. ஐயோ! அழுது அழுது என்காதலியின் கண்கள் சிவந்துபோய் (வீங்கி) இருக்கும். உஷ்ணமான பெருமூச்சுகளால் அவள் உதடுகளின் நிறமே மாறி இருக்கும். தன் கை (யாகிய தலையணை) மேல் சாய்க்கப்பட்ட அவள் முகமானது, விரிந்துகிடக்கும் கேசபாரங்களால் முழுமையும் தெரியாது மறைந்திருக்கும்—இந்நிலைமையில் உன் வரவால் காந்தி குறைந்த சந்திரபிம்பம்போல் அவசியம் (பரிதாப)மான நிலைமையை அடைவாள்.

22. நீ அவளைப் பார்க்க நேரிடும்பொழுது, உன்முன் அவள் தேவஆராதனை செய்துகொண்டிருப்பாள். அல்லது, மெலிந்த என் சரீரத்தை மனதினால் த்யானம்செய்து, அதுபோல் படம் எழுதிக் கொண்டிருப்பாள். அல்லது கூட்டிலிருப்பதும இனிமையாய்ப் பேசுவதுமான மைனாப் பறவையைப்பார்த்து, "ஏ இனிமை யறிந்த பறவையே! (ரஸிகே!) உன்யஜமானனை நீ நினைக்கின்றாயா? நீ அவருடைய ப்ரியை யல்லவா?" என்று கேட்டுக்கொண்டிருப்பாள்.

23. அல்லது, ஏ நண்பனே! அவள் மலினமான ஆடை தரித்த மடிமீது 'வீணை'யை வைத்து, என் பெயர் இணைக்கப்பட்டுக 'கவனம்' செய்யப்பட்ட ஏதாவது ஓர் பதம் (பாட்டு) பாட ஆசையுடன் முயல்கையில், (என் நினைவால் பெருகும்) கண்ணீரால் (வீணையின்) தந்திகள் நனைந்துவிடும். அவைகளைச் சிரமப்பட்டுத் துடைத்துக் கொண்டு (மறுபடி) வாசிக்க ஆரம்பிப்பாள். தானே கவனஞ்செய்த தாயினும் அப்பாட்டின் மூர்ச்சனைகளை யடிக்கடி மறந்து தியங்குவாள்.

24. அல்லது, நாங்கள் பிரிந்த தினத்தில் விதிக்கப்பட்ட தீர்ப்புக் காலத்தின் மீத மாதங்களை, வாயிற்படியில், அலங்காரமாய் வைக்கப்படும் மலர்களைத் தரையில் வைத்துக் கணக்கிட்டுக் கொண்டிருப்பாள். அல்லது என்னுடன்கூடி யனுபவித்த சிங்கார ரஸங்களை மனதில் நினைத்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்பாள். இவை போன்ற நடத்தைகளெல்லாம் அநேகமாய்க் காதலனைப்பிரிந்த மாதர்களைக் காலங்கழிக்கச் செய்யும் வினோத உபாயங்களல்லவா?

25. பகலில், (முன் கூறிய) வேலைகள் செய்வதால் என் பிரிவால் அவள் அவ்வளவு வருந்தமாட்டாள். இரவில் யாதொரு வேலையுமில்லாததால், அதை (இரவை) உன் தோழி ஐயோ! எவ்வளவு துக்கத்துடன் கழித்துக்கொண்டிருப்பாள்! (நான் இப்பொழுது உன்மூலமா யனுப்பும்) க்ஷேம ஸமாசாரமே அவளைச் சமாதானஞ் செய்யப்போதுமானது. நீ என் அரண்மனையின் பலகணியில் தங்கி அந்நிசிவேளையில் கற்பிற்சிறந்த அம்மங்கை தரையில் படுத்திருப்பதையும் நித்திரையின்றி வருந்துவதையும் பார்ப்பாய்.

26. மனவேதனையால் தேகம் மெலிந்தவளாயும், * விரஹ சயனத்தில் ஓர்புறமாய்ப் படுத்திருப்பவளாயும், கிழக்குத்திசையில் ஓர் கலைமாத்திரம் மீதமான சந்திரபிம்பம்போல் கலைகுன்றிய சரீரமுடையவளாயும், மனதுக்குத் தோன்றியபடி என்னுடன் சிங்கார போகங்கள்செய்து க்ஷணமாய்க் கழித்த இரவெல்லாம் இப்பொழுது கல்பம்போல உஷ்ணமான கண்ணும் கண்ணீருமாய்க் கழித்துக் கொண்டிருப்பவளாயும், (இருக்கக்காண்பாய்.)

27. அமிருதத்தால் குளிர்ச்சிபெற்ற சந்திரகிரணங்கள் பலகணிவழியாய் உட்சென்று பிரகாசிக்கையில் முன் அனுபவித்த ஆசையால் அவைகளைக் கண்களால் பார்ப்பதும் மறுபடி (வெறுப்பால்) அப்படியே (கண்களை) திருப்பிக்கொண்டு கண்ணீர் ததும்பும் இமைகளாற் கண்களை மூடிக்கொள்ளுவதுமாய் இருக்கும். அந்நிலைமையில் அவள் மேகம்நிறைந்த பகலில் மூடியும் மூடாமலுமிருக்கும் தரைத்தாமரைபோல இருப்பதையும் (பார்ப்பாய்.)

28. சாதாரணஜலத்தில் நீராடுவதால் முரமுரப்பானதும் கன்னப்பக்கங்களில் நிச்சயமாய்த் தொங்குவதுமான அளகங் (முன் உச்சிமயிர்) களை இளந்தளிர்போன்ற உதடுகளை வருத்தக்கூடிய பெருமூச்சுகளால் பறக்கச் செய்துகொண்டும் என்னுடன்கூடி யனுபவித்த ஸம்போகங்களைக் கனவிலாவது எப்படியாவது காணலாமென்றெண்ணி நித்திரைசெய்ய ஆசைகொள்வதும் ஆனால் (அடிக்கடி பெருகும்) கண்ணீரால் அந்நித்திரை கலைவதும் (இவ்வாறு அவள் வருந்திக்கொண்டிருப்பதைக் காண்பாய்)

29. ஆதியில் நாங்கள் பிரியும்தினத்தில் மலர்மாலையன்றி ஜடைபோடப்பட்டதும், என் தண்டனை முடிந்து துக்கமெல்லாம் விலகி என்னாலேயே அவிழ்க்கப் படவேண்டியதும், தொடுவதால் வேதனையுடையதாகக்கூடியதும், கடினமும் சரடுமுரடானதுமான தன்

---

குறிப்பு:— * விரஹசயனம்=காதலனைப் பிரிந்த சோகத்தால்ஏற்பட்ட வெறுப்பால் உபயோகிக்கும் அதிகோரமான படுக்கை.

மஹாதிம் ராத்ரீம் = விரஹிகளுக்கு இரவெல்லாம் வெகுநேரமாக (கல்பயுகம்போல்) தோன்றும்

ஒற்றைப் பின்னல் (கூந்தலே) தன் நகங்கள் களையாத கையால் தன் அகன்ற கன்னப்ரதேசங்களினின்றும் அடிக்கடி ஒதுக்கிக்கொண்டு இருப்பாள்.

30. ஆபரணங்களொன்றும் தரிக்காத மிருதுவான சரீரம் வாய்ந்த அவ்வபலை (பலமற்றவள்) படுக்கையில் எப்பொழுதும் (கண்ணும் கண்ணீருமாய்) துக்கத்துடன் படுத்திருப்பாள். நீ அவளைப் பார்த்தவுடன் புதிய ஜலமாகிய கண்ணீர் பொழியும்படி அவள் (நிலைமையில்) உன்னையும் செய்துவிடுவாள். ஏனென்றால் இளகிய மனமுடையவர்களெல்லாம் அனேகமாய்க் கருணையுடன் கூடியவர்களன்றோ?

(இன்னும் வரும்).

R. வேலாயுத நாராயண சர்மா B. A. B. L.

---

## நாட்டுக்கோட்டையாரும் "மூன்றுவருஷக்கணக்கு"ம்

மேற்படி நாட்டுக்கோட்டையாருள் வியாபாரத்தின்பொருட்டு அயல்தேசஞ் செல்லுகிறவர்கள் மூன்று வருஷ மிருந்து வரவேண்டுமென்ற வழக்கம் இப்பொழுது அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இப்படி மூன்று வருஷம் அங்கேயே இருந்து வரவு செலவு செய்து முடிக்கப்படுகிற வியாபாரம் "ஒரு கணக்கு" என்று வழங்கப்படும். இவ்வழக்கம் எம்மவர் பொருளீட்ட அன்னியநாடு செல்ல ஆரம்பித்த காலத்தி லேற்பட்டது. அக்காலம் பாய்க்கப்பலேறி மாதக்கணக்காக யாத்திரைசெய்து தனவெ லெறாதது நிச்சயமில்லாமல் பொருளீட்டச்சென்ற காலம். அத்தகைய யாத்திரை அடிக்கடி செய்தல் சாத்தியமன்றாதலின், "ஆனாலும் சரி, போனாலும் சரி" என்று ஒரேபிடியாக மூன்று வருஷமிருந்து பொருளீட்டும் வழக்கம் ஏற்பட்டது. இப்போது அத்தகைய கஷ்டங்கள் ஒன்றுமின்றிக் குறித்த காலத்தில் போய்வரக் கூடியதாக நீராவிக் கப்பல்கள் ஏற்பட்டுவிட்டன. அப்படியிருக்கும்போது அந்த வழக்கத்தை மாற்றி

மனைவி மக்களை அடிக்கடி பார்த்துச் சந்தோஷிக்கத்தக்க வசதிகளைச் செய்துகொள்ளாமல் பழைய வழக்கத்தையே அனுஷ்டிப்பதால் எத்துணைக் கேடுகள் உண்டாகின்றன வென்பதைச் சற்று ஆராய்வோம்:

முற்காலத்தில் அன்னியநாட்டிற்குப் பொருளீட்டச் சென்றவர்கள் தமமை வெறுத்துச் செல்லவேண்டியிருந்ததால் வயதில் முதிர்ந்தவர்களாகவே பெரும்பாலும் சென்றனர். இப்போது பர்மா, மலேயா நாடுகளிற் பார்த்தால் நூற்றுக்கு ஒருவர்கூடப் பெரிய வயதுடையவரின்றி எங்கு பார்த்தாலும் இளம் பருவமுடைய காளையர்களின் கூட்டமாகவே இருக்கின்றது. இவ்விளைஞர்கள மனைவிமாருடனிருக்கும்போதே எட்டினவரை விலைமாதர்களையும் விரும்புவதனால் தனித்தனப்படி நல்லொழுக்கத்தோடிருப்பார்களா? எமது ஜாதியாசாரப்படிப் பெண்கள் சப்பலேறக்கூடாது. ஆதலின் தனித்துச்செல்கிற இச்சிறுவர்கள் எவ்வளவு யோக்கியர்களானாலும் மூன்றுவருஷமும் தன்னொழுக்கத்தை ஒழுங்காகக் காப்பாற்றித் திரும்புவதுபெரும்பாலும்எட்டுச்சுரைக்காயாகவே முடிகிறது. இவ் விஷயத்தில் ஒரு சிறு குறைகண்டாலும் அதை மலைபோலாக்கித் தூற்றுகிற சுபாவம் எம்மவரிடத்தில் நிரம்பவுண்டு. அதனால் யோக்கியர்களாய்ச் சற்று காட்டி மறைந்ததுபோல் நடந்துகொள்கிற சிலரும் மனந்துணிந்து அதிகமாகக் கேட்டடைகிறார்கள். நோய், ஆபத்து, பொருட்செலவு, வீண்வம்பு, அவமானம் முதலிய பல துன்பங்களுண்டாகிறதற்கு காரணமிதுவேயன்றி வேறல்ல. எத்துணை துன்பங்களுண்டானாலும் இந்த மாயவலையிற்பட்டுழலா மாந்தர் யாவர்? அதனினும் இளமப்பிராயத்தில் மனைவியரைப் பிரிந்திருக்கும் குமாரர்களைப் பற்றிப் பேசவேண்டுமா? உலகவின்பத்தைத் துறந்துநிற்கும் மனவலியுடைய ஞானிகளா வியாபாரஞ்செய்யப் போகிறார்கள்? மனைவி மக்களின்பொருட்டுத் தானே போகிறார்கள்? அப்போது அவர்கள் நிராசையுடையோராயிருத்தல் சாத்தியமில்லையே. பின்னால் தனக்குண்டாகிற நன்மை கருதி ஒருவாறு நல்லொழுக்கத்தோடிருப்பினும் எவ்வளவு நாளைக்குத்தான மனமடங்கும்? இந்தவிஷயத்தில் மூன்றுவருஷம் தன்னைக் காத்துக்கொள்வது உலகப்பற்றுள்ள ஒருவனுக்கு அசாத்தியமான காரியமென்றே

விவேகிகள் ஒப்புக்கொள்வார்கள். தற்காலத்தில் அன்னியநாடு சென்றுவருகிற இளைஞர்கள் பெரும்பாலும் நோயுற்றவர்களாகவே திரும்பிவருவது இதற்கு ஸாக்ஷியாகும். இதனால் சந்தானவிருத்தி குறைவதோடு நோயுற்று அற்ப ஆயுளாகப்போகிற குழந்தைகள் உண்டாகவும் ஏதுவாகிறது. இது முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம்

இது இப்படியாக இவர்களைப் பிரிந்திருக்கும் மனைவிமார்களைப் பற்றி நினைக்கும்போது மிகப்பரிதாபமாக இருக்கிறது. அவர்கள் தங்கள் யௌவனகாலமெல்லாம் வீணாக சதா வாடினமுகத்தோடு தூரதேசஞ்சென்ற தங்கணவர்கள் பலஆபத்துக்களினின்றும் மீண்டு தம்மிடம் எப்போது வருவார்களோவென்ற ஏக்கத்தோடு வழிபார்த்து நிற்கிறார்கள்.

ஏதாவது ஒரு தந்தி வந்துவிட்டால் என்ன ஆபத்தோ என்ன அபாயமோ வென்று வயிற்றைப் பிசைந்துகொண்டு படிப்போரின் வாய்பார்த்து நிற்கிறார்கள் (இது பிளேக நோயாலுண்டானபயம்.) இவர்கள் தங்கள் வயதுக்கேற்ப உண்டுடுத்து விழாக்கொண்டாடி மக்களைப்பெற்று தங்கணவர்களோடு சந்தோஷமாய் பொழுதுபோக்கி வாணாளை அறவழியிற் செலுத்தாது கண்ணிருந்தும் குருடிகளைப் போலாவதுயாருக்குந் தான்வருத்தமுண்டாக்காது? இன்னுமிவர்கள் படியாதபெண்களாதலின் இம்மட்டோடு சகித்துக்காலந்தள்ளுகிறார்கள். படித்திருப்பாராயின் கைநிறைந்த பொன்னைப்பார்க்கிலும் கண்ணிறைந்த கணவர்களைப் பெரிதாக மதித்திருப்பார்கள்.

விரித்துப் பேசுவதில் என்ன பயன்? சுருங்கக் கூறுமிடத்து இவ்வழக்கம் பல சங்கடங்களைத் தந்துகொண்டிருக்கின்றது. இளைஞர்களான ஸ்திரீ புருஷர்கட்குக் கஷ்டத்தையும் துன்பத்தையும் தந்துகொண்டிருக்கின்றது. ஆதலின் இதை நிவர்த்திக்கவேண்டியது அவசியமாகிறது. ஆனால்முழுதும் மாற்ற முடியாவிட்டாலும் சிறிது சிறிது குறைத்துக்கொள்ளவாவது முயலவேண்டும். அதற்கு "மூன்றுவருஷம்" ஒரு கணக்கு என்றிருப்பதை ஒன்றரை வருஷம் அல்லது இரண்டுவருஷம் ஒரு கணக்கு என்று மாற்றிக்கொள்வது தக்க உபாயமாகும். இதனால் முதலாளிகளுக்காவது ஏஜண்டு (காரியஸ்தர்) களுக்காவது நஷ்டமில்லை ஏஜண்டுகள்தான் தங்கள் நன்மையைக் கருதி இதில் முதலில் முயலவேண்டும். முதலாளிகள் பரோபகாரமாக இதை ஒப்புக் கொள்ளவேண்டும். அப்போது இக்கஷ்டங்கள் நீங்கிவிடுமென்பதில் ஐயமில்லை. நாம் சும்மாயிருந்தால் நமது வழக்கமும் சும்மாதானிருக்கு மென்பதை என் சகோதரர்கள் கவனிப்பாராக.

மு. சின்னையா செட்டி.
மகிபாலன்பட்டி.

# தென்னை, பனை மரத்து வண்டுகள்.

இரண்டு தினுசு வண்டுகள் தென்னைமரங்களையும் மற்றப் *பனைவர்க்கங்களையும் பீடித்து அச்செடிகளுக்கு மிக நஷ்டத்தை உண்டாக்குகின்றன. அவைகளில் ஒன்று, தமிழில் "தென்னைவண்டு" என்றும், மலையாளத்தில் "சேள்ளு"என்றும் சொல்லப்படுகின்றது. அது தலையில் ஒரு கொம்பையுடைய கறுப்புவர்ணமுள்ள ஒருபெரிய வண்டு. இது குருத்து ஓலைகளையும் மரத்தின் மண்டையிலுள்ள மட்டைகளையும் துளைத்து நாசமாக்கும். இவ்வண்டுகள் இளந் தென்னமரங்களைத் துளைத்து ஜாஸ்தி நாசமாக்குவதைப்போல் முற்றினமரங்களைக் கெடுப்பதில்லை. இவைகள் செத்துப்போன அடிமரங்களிலாவது அல்லது எருக்குழிகளிலாவது முட்டைகளிடும். அவைகளிலிருந்து புழுக்கள் வெளிவந்து, அழுகும் வஸ்துக்களைத் தின்று பெரிதாகின்றன. இப்புழுக்கள் நாளாவட்டத்தில் மேற்சொன்ன வண்டுகளாக உருமாறுகின்றன.

வேறொருவித வண்டு தமிழில் "செவ்வண்டு" என்று சொல்லப்படும். இது முன்சொன்ன கறுப்புவண்டைவிடச் சிறிதானது. இதை அதனுடைய நீண்ட வளைவுள்ள மூக்கால் கண்டறிந்துகொள்ளலாம். இது பனைகளின் உச்சிகளில் சாதாரணமாய்த் தென்னை வண்டாலாவது அல்லது பனைமரம் ஏறுகிறவர்களாலாவது செய்த வடுப்பட்ட இடங்களில் முட்டைகள் வைக்கும். இதிலிருந்து வெளிப்படும் புழுக்கள் உச்சிமரத்தைத் துளைத்துச் செடிகளைக் கொன்றுவிடும்; இப்புழுக்கள் நார் இழைகளைக்கொண்டு ஒரு கூடுகட்டி அதில் ஸ்தம்பித்திருந்து சுமார் இரண்டுவாரங்களில் உருமாறி வண்டுகளாகின்றன.

இவைகளின் கெடுதிகளை மாற்றக்கூடிய பிராயச்சித்தங்கள்:

1. தென்னைவண்டு, தான் ஜாஸ்தி கெடுதி செடிகளுக்குச் செய்யாவிட்டாலும், செவ்வண்டினால் உண்டாகும் நஷ்டத்துக்குக் காரணபூதமாயிருக்கிறது. இந்தத் தென்னை வண்டை அநேக இடங்களில் தற்காலம் மரங்களிலிருந்து எடுப்பதைப் போல் வெகு சுலபமாய ஒரு வண்டு எடுக்கும் இரும்புமுள் ஊசிகொண்டு எடுத்து விடலாம்.

2. இவ்வண்டுகளை அப்புறப்படுத்திய பின் அவைகள் துளைத்திருக்கும் துளைகளைத் தாரினால்தடவி மண்கொண்டு மூடிவிடுவதுடன், பனையேறிகள் மரங்களில் செய்திருக்கும் வடுக்களிலும் மேற்சொன்ன தாரைத் தடவ

* தென்னை, பனை, கமுகு, ஈச்சை முதலியன பனைவர்க்கத்தைச் சேர்ந்த மரங்களாகும்.

வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் சேவ்வண்டுகள் மரங்களிலிருக்கும் காயங்களில் முட்டைகளைவைத்து நாசமாக்கிவிடும். இவ்வண்டுகள் முட்டை வைத்தபின் மரங்களைச் சுலபமாய்க் காப்பாற்ற இயலாது.

3. பொடிமணலும் உப்பும் சமபாகம் கலந்து ஒரு வருஷத்திற்கு இரண்டுதடவை மரங்களின் உச்சியில் மட்டைகளுக் கிடையே கொஞ்சம் போடலாம். இதனால் தென்னை வண்டைத் துரத்திவிட உதவுண்டு.

4. செவ்வண்டினால் பீடிக்கப்பட்ட மரங்கள் திரும்பவும் பிழைக்கமாட்டா. ஆகையால் அவைகளைத் தாமஸமின்றி வெட்டிவிடவேண்டும். இந்தப் புழுக்களோடு இந்த மரத்தின் உச்சியையும் அழித்திடவேண்டும். இல்லாவிட்டால் இதிலிருக்கும் புழுக்கள் பின்னால் வண்டுகளாக மாறிப் புது மரங்களை நாசமாக்கும்.

5. ஒருதோப்பில் செத்துப்போன மரங்களை அப்போதைக்கப்போது வெட்டிக் கிறியுடைத்துக்காயப்போடவேண்டும். அப்படிக்கில்லாமல் அவைகளை அழுகவிடவே கூடாது. ஏனென்றால் அழுகும் பதார்த்தங்களிலும் இடங்களிலும் தென்னைவண்டு பல்கிப் பெருகும். தோட்டத்துக்குள் எந்த விதமான வஸ்துவும் அழுகிக் குவிய இடங்கொடுக்கக் கூடாது.

6. சில இடங்களில் தென்னமரத்துச் செவ்வண்டின் புழுக்கள் அடிமரத்திலிருந்து உள்ளேசென்று மரத்தைக் கெடுக்கிறதென்ற அபிப்பிராயம் இருக்கிறது. ஆகையால் மேல்தரையிலிருந்து சிலஅடிகளுக்குமேல்மரத்தைத் துளைப்பது வழக்கமாயிருக்கிறது. இவ்வித அபிப்பிராயம் தப்பானது. மேற்சொன்னபிரகாரம் மரங்களைத் துளைப்பது அதிகஷ்டத்தை யுண்டுபண்ண ஏதுவாகும். ஆகையால் அப்படிச் செய்யவே கூடாது.

மேற்சொன்ன இரண்டுவண்டுகளின்நாசமும் ஒன்றையொன்று பொருத்ததாயிருக்கிறது; தென்னைவண்டு, நன்றாயிருக்கும் உச்சிமரங்களில் துளைகளை யுண்டாக்கிச் செவ்வண்டு ஏறிதில்வந்துசேர இடத்தை யுண்டாக்குகிறது. செவ்வண்டுகளினால் செத்துப்போன மரங்கள் தென்னைவண்டுகள் பல்கிப்பெருக நல்ல வாசஸ்தானமாகிறது. ஆகையால் மேற்சொன்னபடி முன்ஜாக்கிரதையோடு கவனமசெலுத்தாவிட்டால், இவ்வண்டுகளால் பீடித்த தென்னந்தோப்பில் மரங்கள் நாளாவட்டத்தில் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் நாசமாவதைத் தடுக்கமுடியாது.

ஸி. ஏ. பார்பர்,
சர்க்கார் ஸ்தாவர சாஸ்திரி.

# சமாசாரக்கொத்து.

## தமிழகச் செய்தி.

### மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை.

---

விரோதிகிருதுஸு வைகாசிமீ" ௩௨வ ஸ்ரீ திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் குருபூஜை மிக்க சிறப்பாக நிறைவேறியது. அன்று பகல் 3 மணிக்கு சன்மார்க்கசபை கூடிற்று அன்று சபையில் கூடினோர் 250 பெயர்க்குமேலி ருக்கும். சபையார் விருப்பின்படி மகிபாலன்பட்டி ஸ்ரீ மு. கதிரேசன்செட்டி யார், அவர்கள் அக்கிராசனத்தமர்ந்து முகவுரை கூறினார்கள். பின், வலயப் பட்டி ஸ்ரீ சிவ. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் "தொழில்" என னும் விஷயத்தையும், சிவகங்கை ஸ்ரீ நடராஜ ஐயர் அவர்கள் "நால்வாயு தார இரகசியம்" என்னும் விஷயத்தையும், தூத்துக்குடி சைவப்பிரசாரகர் ஸ்ரீ பொ. முத்தைய பிள்ளை அவர்கள் "மணிமந்திர ஔஷதம்" என்னும் விஷயத்தையும், வலயபட்டி விநாயக வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ திரு. இராமசாமி ஐயங்கார் அவர்கள் "பொருட்செலவுமுறை" என்னும் விஷயத்தையும், மதுரைத தமிழ்வித்துவான் ஸ்ரீ சுந்தரேசுவரஐயர் அவர்கள் "பெரியபுராணப்பெருமை" என்னும் விஷயத்தையும், ஸ்ரீ மு குமரப்ப செட்டியார் அவர்கள் "சிற்றினஞ்சேராமை" என்னும் விஷயத்தையும், நன்கு உபந்நியசித்தார்கள். முடிவில் தலைவரவர்கள் நடந்த வுபந்நியாசங்க ளெல்லாவற்றைப்பற்றியும் தம் நல் அபிப்பிராயங்களைக் கூறினர்.

ஆனிமீ" ௯வ சன்மார்க்கச்சபையில் ஸ்ரீ மு குமரப்பசெட்டியார் அவர்க ளால் திருவிளையாடற் புராணத்தில் "இரசவாதஞ் செய்த படலம்" பிரசங் கிக்கப்பட்டது.

இரண்டாம் தேதி மகிபாலன்பட்டி ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் பெரியபுராணத்தில் "ஸ்ரீ சாக்கியநாயனார் புராண"த்தைப்பிரசங் கித்தனர். அப்பொழுது ஆங்கு வந்திருந்து கேட்டு மகிழ்ந்த மதுரைத் தமி ழ்ப் பண்டிதர் ஸ்ரீ சுந்தரேசுவர ஐயர் அவர்கள் பிரசங்கத்தைப்பற்றி

தூக்குருசீர் மிக்கதிருத் தொண்டர்புரா ணத்துளுயர்
சாக்கியர்மெய் கண்ட சரித்திரத்தை—நோக்கு
மதியாரு மன்பின் மனமுருகச் சொற்றான
கதிரேச காவலனை கண்டு.— என்ற ஓர் வெண்பாக் கூறினர்.

### வலயபட்டி.

---

ஸ்ரீ ஞானசம்பந்தசபையின் முதலாண்டு நிறைவேற்றக் கொண்டாட் டம். வைகாசிமீ" 31வ இச்சபை கூடிற்று. சபையார் விருப்பின்படி ஆச

துக்குடி ஸைவப்பிரசாரகர் ஸ்ரீ போ. முத்தையபிள்ளை அவர்கள் தலைவரா யினர். தலைவரவர்கள் முகவுரை கூறியவுடன் காரியதரிசியால் முதலாம ஆண்டு அறிக்கை படிக்கப்பட்டது. மகிபாலன்பட்டி ஸ்ரீ மு. கதிரேசச்செட்டி யார் அவர்களும், ஸ்ரீ நடராஜஐயர் அவர்களும அறிக்கையைப்பற்றி அபிப் பிராயங் கூறினார்கள். தலைவரவர்கள் 'உலகேலாம்'' என்னும் பெரியபுராண முதற்செய்யுள் விரிவுரையும், முடிவுரையும் கூறினார்கள், மதுரைத்தமி ழ்ப்பண்டிதர் ஸ்ரீ சுந்தரேசுவர ஐயர் அவாகள் கம்பராமாயணம் "அங்கதன் தூதுப்படலத்தை"ப் பிரசங்கித்தனர்.

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை.

விரோதிகிருதுஸு ஆனிமீ ௨௬ "ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை" மிக்கசிறப்பாக நிறைவேறியது. பற்பல நகரங்களினுமிருந்து, பல பிரபுக்களும் விதவான்களும் வந்து நிறைந்தனர். பகல் 3 மணிக்குச் சன்மார்கசச்சபை கூடிற்று. சபையார் வேண்டியபடி தூத்துக்குடி ஸ்ரீ போ. முத்தைய பிள்ளை அவர்கள் தலைமையேற்றனர். தலைவரவர்கள் "சமயம்" என்னும் விஷயத்தையும், மகிபாலன்பட்டி ஸ்ரீ மு. சிந்நயசெட்டியார் அவர்கள் "ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் பெருமை" யையும், காரையூர் கணித வித்துவான் ஸ்ரீ சொ. சிந்நயவேளிர் அவர்கள் "பெற்றோர்ப்பேணல்" என்னும்விஷயத்தையும், உலகன்பட்டி ஸ்ரீ சி. மு. லெக்ஷ்மணச்செட்டியார் அவர்கள் "இனியவைகூறல்" என்னும் விஷயதையும், ஸ்ரீ மு. கதிரேசச்செட் டியார் அவர்கள் "அருள்" என்னும் விஷயத்தையும், ஸ்ரீ கணேசர் செந்த மிழ்க் கலாசாலை உபாத்தியாயர் ஸ்ரீ சிங்காரவேற்பிள்ளை அவர்கள் "சிவவேட வணக்கமுறை" என்னும் விஷயத்தையும், சன்மார்க்க சபைக் காரியதரிசி ஸ்ரீ மு. தமரப்பசெட்டியார் அவர்கள் "ஊழ்" என்னும் விஷயத்தையும். வ்லயபட்டி விநாயகர் வித்தியாசாலை மாணாக்கர் ஸ்ரீ ந. பெரி. இராமசாமிச் செட்டியார் அவர்கள் "கல்வி" யைப்பற்றியும இனிமைபெற உபந்நியசித்த தார்கள். பின் தலைவரவர்களால் முடிவுரையும், காரிய நிருவாகரால் வந்த னமுங கூறபபட்டன.

மேலைச்சிவன்.

சென்னை ராஜதானிக்குக் கவர்னராய் வரும் ஸர் தாமஸ் டேவிட் கிப் ஸன் கார்மிக்கேல் என்பவர், அக்டோபர்மீ 29௳ ஞாயிற்றுக்கிழமையன்று, சென்னைக்கு வருவதாய்த் தெரிகிறது.

போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டில் கன்னம்:— மதுரை ஆக்டிங் போ லீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் வீட்டில் கன்னம் வைத்து, சுமார் 2500௹ பெறும்படியான சொத்துக்களைத திருடர் எடுத்

தாக்கொண்டு போய்விட்டார்களாம். இன்ஸ்பெக்டர் வீட்டிலேயே இப்படியானால் மற்றவர்கள் நிலை எப்படியோ?

---

உலகத்தைச்சுற்றிவரும் பாதசாரி:-தென்னாபிரிகா வாசியாகிய நால்ப்ரோளன் என்பவர் இப்பூமண்டலத்தை ஆறுவருஷத்தில், கால்நடையாக சுற்றப் பிரயாணஞ்செய்து முடிப்பதாய 5000 பவுன் பந்தயம் போட்டுப் புறப்பட்டு வந்திருக்கிறார். ஊரைவிட்டு இதுவரை 2 வருஷம் ஆய்விட்டது ஜூலைமீ 9உ யன்று கங்கைக் கரையிலுள்ள அலகபாத் நகரத்திற்கு வந்து, தமது விர்த்தாந்தத்தைச் சொன்னாராம். அங்கிருந்து இப்பொழுது புறப்பட்டுக் கிழக்கே போகிறார்?

---

மனைவியை முத்தமிட்டதற்குத் தண்டனை:—நியூஜெர்ஸி என்ற நகரத்தில மிஸ்டர் ஜார்ஜ் ஷீட் என்பவரின் மனைவி, தன் கணவன் தன்பிரியமில்லாமல்,முத்தமிட்டாரென்று கோர்ட்டில் முறைப்பாடு செய்தாள். கோர்ட்டார் அவரை 25 பவுன் அபராதம் போட்டு, நல் நடக்கைக்கு ஜாமீன் வாஙகினர். அதோடு, அவள் பிரியத்தைச் சம்பாதித்தே முத்தமிட வேண்டுமென்றும் உத்தரவுசெய்தார். அதன்மேல் அவள் அவர் கணக்கில்லாத முத்தமிட்டதாக முறைப்பாடு செய்தாள். கோர்ட்டார், ஒரு நாளைக்குப் பத்துத்தரம் அதாவது மத்தியானம் வரை 5 முத்தமும் இராச் சாப்பாடு வரை 5 முத்தமும் இடவேணடுமென்று உத்தரவு கொடுத்தாராம். அவள் புருஷனும் அவ்வுத்தரவுக்குக் கீழ்ப்படிந்து கையெழுத்துப் போட்டாராம்.

---

இரண்டு போலீஸ் கான்ஸ்டேபில்கள் வதைக்கப்பட்டார்கள்:—கலகட்டாவிலே சில மகமதிய கசாப்புக் கடைக்காரர்கள் திருட்டுப் பசுமாடு வைத்திருப்பதாகச் சந்தேகத்தின்மேல் பிடித்து வைக்கப்பட்டிருந்த இரண்டு மகமதியர்களைப் போலீஸாரிடமிருந்து மீட்க முயன்றதில், இரண்டு போலீஸ் கான்ஸ்டேபில்களை சித்திரவதை செய்துவிட்டார்கள். 12 பேரைப் பிடித்திருக்கிறார்கள். அந்த இரண்டு கான்ஸ்டேபில்களும் பிழைப்பது அரிதெனப்படுகிறது.

---

மிஸ்டர் ஆஷின் கொலை:— மிஸ்டர் ஆஷின் கொலைக்கேஸை நடத்த மிஸ்டர் T. ரிசமண்ட் ஸ்பெஷல் பப்ளிக் பிராசிக்யூட்டராய் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் சென்ற ஜூலைமீ 15உ யன்று திருநெல்வேலி போய்ச் சேர்ந்துவிட்டார். அவர் அங்குள்ள அதிகாரிகளுடன் அந்த கேஸ் விஷயமாய்க் கலந்து வருகிறார். பாரிஸ்டர் மிஸ்டர் C. F. நேபியரும் அக் கொலைக்கேஸில் ஆஜராய்ப் பேசுவாரெனப் படுகிறது. ஆனால் அந்தக் கேஸ், விசாரணைக்கு இப்போது எடுத்துக்கொள்ளப் படுமென்று திட்ட

மாய்த் தெரியவில்லை. போலீஸார் இன்னும் சோதனை செய்துகொண்டு தானிருக்கிறார்கள்.

---

மதராஸ் 'டைம்ஸ்' பத்திரிகை மன்னிப்புக் கேட்டுக்கொண்டது:— இந்த ஆங்கிலோ இந்தியப்பத்திரிகை சென்ற மாதம் 19-ந்தேதி தனது தலையங்கத்தில் மிகவும் ஈனமான ஒரு வியாசத்தில் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜான ஜஸ்டிஸ் மிஸ்டர் P. R. சுந்தரய்யர் வகேஷன் கோர்ட்டு நடத்தினதைத் தாறுமாறாகக் கண்டித்து எழுதிற்று. ஜஸ்டிஸ் மிஸ்டர் சுந்தரய்யர் வகேஷன காலத்தில் பங்களூர் பாலக்காடு முதலியவிடங்களில் கோர்ட்டு நடத்தி கக்ஷிக்காரர்களுக்கும வக்கீல்களுக்கும் பெரிய தொந்தரவை உண்டு பண்ணி விட்டாரென்றும, அவர் ஜட்ஜ் முறைமையில் தமது பொறுப்பைச சிறிதும் உணரவில்லை என்றும், தமது சொந்த சௌகரியத்தைக் கருதிப் பிறருக்கு நஷ்டத்தை விளைத்தாரென்றும் பின்னும் பலவாறு கண்டனம் செய்து எழுதிற்று. கொஞ்சநாளைக்குப்பிறகு, அது, தான் 19உ எழுதியது பெரிதும் அறியாமையால் எழுதினதென்றும், தான் ஸ்ரீ ஜஸ்டிஸ் சுந்தரஐயருடைய யோக்கியதையை இழிக்க வேண்டுமென்னும் கெட்டஎண்ணத்துடன் அக்காரியம் செய்யவில்லை என்றும், தான் அறியாமையால் எழுதியதற்குப் பச்சாத்தாபப்படுவதாகவும் ஜஸ்டிஸ் மிஸ்டர் சுந்தர ஐயரிடத்தில் தான் மனப்பூர்வமாய் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறதாகவும் எழுதியிருக்கிறது.

---

டில்லி முடிசூட்டுக் கொண்டாட்டத்துக்கு ஜார்ஜ் அரசரும் அரசியும வரும்போது, அவர்களுக்கு இந்தியரால் விசேஷஉபசாரப்பத்திரம் ஒன்று வாசிக்கப்படும். அப்பத்திரத்தை வைத்துக் கொடுத்தற்காகப் பெருந் தொகையான பணஞ்செலவிட்டு ஓர் தங்கரத்தினப்பெட்டி செய்வதற்கு உபசரணைக் காரியஸ்தர் யோசித்திருந்தனர். இதை அரசரும் அரசியு மறிந்து, அப்படிப்பட்ட வீண்செலவையொழித்து, அதற்கென்று சேர்க்கப்படும் பணத்தைக்கொண்டு, இந்தியாவிலே வறுமைப்பிணியாற் கஷ்டமனுபவித்துக் கொண்டிருக்கின்ற ஏழைகளின் பிழைப்புக்கடுத்த விஷயங்களிலே செலவழித்துவிடுவது நல்லதெனத் தெரிவித்திருக்கிறார்கள் என அறிந்து மகிழ்கின்றோம்.

---

பிக்காடெல்லி என்னும் ஊரில் ஒரு இங்கிலீஷ்மாது சென்ற மே மாதத்தில் நாய்முகத்தோடு ஒரு குழந்தையை உயிரோடு பெற்றெடுத்தாளாம். இந்த அதிசயப் பிறவியினுடைய காரணத்தை அறிய சில பேர்போன டாக்டர்கள் வந்து விசாரித்ததில் இவள் கர்ப்பமாக இருக்கும்போது நாய்க்குட்டியை மிகுந்த அருமையாக வளர்த்து வந்ததாகவும் அந்த நாய் இரவும்

பகலும் அவனோடுகூட இருந்ததாகவும் தெரிகிறது. நாய் மூக்கக் குழந்தை யின்னும் உயிரோடிருந்தபோதிலும் வெகுநாளைக்கு ஜீவித்திருக்காதென் றூ ஹிக்கப்படுகிறது.

---

புஸ்தக வரவு:—சுதேசமித்திரன் உதவி பத்திராசிரியராகிய ஸ்ரீநாகை கோபாலகிருஷ்ணபிள்ளை அவர்கள் அன்புகூர்ந்தனுப்பிய "ஞானபாலன்" என்னும் தமிழ் நாவலையும் பிரஜானுகூலன் பத்திராதிபர் ஸ்ரீ S. G. இராமானுஜலுநாயுடுகாரு நேரில் தந்த பிரபஞ்சவிலாஸமும் பெற்றேம். இவற்றைப்பற்றிய நமது அபிப்பிராயம் அடுத்த பத்திரிகையில் வெளியாகும்.

பத்திராதிபர்.

---

# திருச்செந்தூர்ப் பிரபந்தத்திரட்டு அரும்பதவுரையுடன்.

---

கலியுகவரதராகிய திருச்செந்தூர்க் குமாரக்கடவுளைப்பற்றித் திருவருள் பெற்ற மகான்களாகிய வித்வான்களாற் பாடப்பெற்ற ஆறு பிரபந்தங்களுடன், இராமநாதபுரம் ஸம்ஸ்தானம அவதான வித்துவான சரவணப்பெருமாட்கவிராயரவர்கள் செய்த கந்தவருக்கச் சந்தவெண்பா வொன்றும் ஆக ஏழுபிரபந்தங்களையும் மதுரைத்தமிழ்ச்சங்கவித்துவான மு. ரா. அருணாசலக் கவிராயரவர்கள் செய்த அரும்பதவுரையுடன் உயர்ந்த காகிதத்தில் டிம்மி 8 பேஜ் சைசில் 420 பக்கங் கொண்டதாகவும், சுத்தப்பதிப்பாகவும் அச்சிட்டுத் தங்க லிலிட்டுடன் காலிக்கோபயிண்டு செய்து சொற்பவிலையாகப் புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—8—0 [illegible] ஏற்படுத்தியிருக்கிறது. வி. பி. சார்ஜ் வேறு. இப்பிரபந்தங்கள் செய்த பெரியோர்கள் சரித்திரங்களும், அங்கங்கே யெழுதப் பெற்றுள்ளன.

அரும்பதவுரையுடன் இப் பிரபந்தத்திரட்டி லடங்கியவைகள்:—

1. திருச்செந்தூர்த் தலபுராணம். 2. ஷை பிள்ளைத்தமிழ். 3. திருச்செந்திணிரோட்டயமகவந்தாதி. 4. திருச்செந்திற் கலம்பகம். 5. திருச்செந்தூர்க் கலிவெண்பா. 6. திருச்செந்தூர்த் திருப்புகழ். 7. கந்தவருக்கச் சந்தவெண்பா.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசதாரிடம் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மு. ரா. அருணாசலக் கவிராயர்,
விவேகபாநுப்பிரஸ், மதுரை.